DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

--

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.

வழக்கு எண்.	SC No.181/2022	அரசுத்தரப்பு	P.W.1
பெயர்	முத்துக்குமார்	கிராமம்	
தந்தை / கணவர் பெயர்	கருப்பையா	வட்டம்	
வயது		மாவட்டம்	

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.06.2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் புதுக்கோட்டை மாவட்டம் திருக்கோகர்ணம் கம்மாளர் தெருவில் குடியிருந்து வருகிறேன். கடந்த 15.08.2021 தேதியில் நடுஇரவு சுமார் 2.30 மணியில் இருந்து 2.45 மணியளவில் நான் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தேன். என்னுடன் எனது தாயார் ஆயிபொண்ணு, எனது அண்ணன் வீரமுத்து, எனது இரண்டாவது அண்ணன் கார்த்தி, எனது அண்ணி மலர்கொடி ஆகியோர் தூங்கிக் கொண்டிருந்தோம். எங்கள் வீட்டிற்கு வெளியே வெடி வெடித்ததுபோல் சத்தம் கேட்டது. நாங்கள் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்தோம். வீட்டின் முகப்பு கதவில் போட்டிருந்த ஸ்கிரின் துணி எரிந்த கொண்டிருந்தது. ஆட்டுக்குட்டி ஒன்று தீயில் கருகிவிட்டது. பாட்டிலில் பெட்ரோலை நிரப்பி அதை பற்ற வைத்து பெட்ரோல் குண்டை எரிந்துள்ளார்கள். அது கதவில் பட்டு ஸ்கிரின் துணி மற்றும் ஆடு எரிந்தது. நாங்கள் வெளியில் வந்து பார்த்தபோது வேறு நபர்கள் யாரும் அங்கு இல்லை. பாட்டில் துகள்கள் எங்கள் வீட்டு வாசலில் கிடந்தது. போலிசில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் நான் தான் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து அ.சா.ஆ.1. போலிசார் புகாரை பெற்றுக்கொண்டு என் வீட்டிற்கு வந்து தடையங்களை கைப்பற்றினார்கள். போலிஸ் விசாரணையில் பெட்ரோல் குண்டு வீசியவர்கள் விஜய், மணி, கருப்பசாமி என்று தெரியவந்ததாக போலிசார் என்னிடம் கூறினார்கள். மேற்படி மூன்று நபர்களையும் அதற்கு முன்பு எனக்கு தெரியாது. அவர்களுக்கும் எங்களுக்கும் எந்த முன்விரோதமும் இல்லை. எனது தகப்பனார்பெயர் கருப்பையா. எங்கள் வீட்டை தான் கருப்பையா வீடு என்று சொல்வார்கள். என்னிடம் காட்டப்படும் ஸ்கிரின் சம்பவ சமயத்தில் எங்கள் வீட்டின் முன்பு போட்டு வைத்திருந்து தீயில் எரிந்து போன ஸ்கிரின் ஆகும். என்னிடம் காட்டப்படும் உடைந்து போன பாட்டில் துகள் எங்கள் வீட்டில் இருந்து போலிசார் கைப்பற்றிய பாட்டில் அல்ல. என்னிடம் காட்டப்படும் திரியையும் போலிசார் எங்கள் வீட்டில் இருந்து கைப்பற்றவில்லை.

அரசுதரப்பில் சாட்சியை பகுதியாக பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய கேட்டுக்கொண்டதன்பேரில் அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

ஆஜர் எதிரிகள் மூன்று பேரையும் நான் பார்த்ததில்லை. என்னுடைய போலிஸ் விசாரணையின்போது போலிசாரிடம் எதிரிகள் மூன்றுபேரும் எனது வீட்டில் பெட்ரோல் நிரப்பிய பாட்டில்களால் உருவாக்கப்பட்ட குண்டுகளை எரிந்து விட்டு splender plus இரு சக்கர வாகனத்தில் தப்பி சென்றதாக கூறினேன் என்று சொன்னால் சரியல்ல. அது குறித்து நான் அக்கம் பக்கம் விசாரித்ததில் அவர்கள் எங்களுடன் அடிக்கடி தகராறில் ஈடுபட்டு வந்தவர்கள் என்று தெரிந்து கொண்டதாக எனது போலிஸ் விசாரணையில் கூறியிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தற்கு வெளியே வைத்து ஆஜர் எதிரிகளுடன் நான் சமாதானமாக போய்விட்டதால் அவர்களை வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் வீட்டிலிருந்து பெட்ரோல் குண்டு வீசப்பட்ட அந்த பாட்டில் உடைந்த நிலையில் போலிசார் கைப்பற்றினார்கள் என்றும், மேலும் அதனுடன் கூடிய திரியை கைப்பற்றினார்கள் என்றம் ஆனால் நான் வேண்டுமென்றே நீதிமன்றத்தில காட்டப்படும் பாட்டிலையும், திரியையும் எங்கள் வீட்டில் இருந்து போலிசார் கைப்பற்றியிருக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– முத்துக்குமார்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.
Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.